தினமணி

உணவு தானிய உற்பத்தியை அதிகரிக்க இலக்கு: முதல்வர் ஜெயலலிதா

First Published : 12 Oct 2011 12:30:21 AM IST



முதல்வர் ஜெயலலிதா தலைமையில் தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற திருத்தியமைக்கப்பட்ட மாநில திட்டக் குழுவின் முதல் கூட்டம். உடன் தலைமைச் செயலா

சென்னை, அக். 11: தமிழகத்தில் உணவு தானிய உற்பத்தியை 1.15 கோடி மெட்ரிக் டன்னாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக முதல்வர் ஜெயலலிதா பேசினார்.

புதிதாக அமைக்கப்பட்டுள்ள மாநில திட்டக் குழுவின் முதல் கூட்டம், தலைமைச் செயலகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது. இந்தக் கூட்டத்தில் முதல்வர் ஜெயலலிதா ஆற்றிய உரை:

மாநிலத்தில் அனைத்து தரப்பு மக்களும் பயனடையும் வகையில், நீடித்த பொருளாதார வளர்ச்சியை எட்ட எனது தலைமையிலான தமிழக அரசு உறுதிப் பூண்டுள்ளது. 11-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் மாநிலத்தின் சராசரி வளர்ச்சி விகிதம் 9 சதவீதம் என்ற நிலையை எட்ட இலக்கு நிர்ணயம் செய்யப்பட்டது.

தமிழகத்தில் முதன்மை, இரண்டாம் தர துறைகளில் நிகழ்ந்த வளர்ச்சிக் குறைபாடு காரணமாக தேசிய அளவிலான சராசரி அளவைவிட மாநிலத்தின் வளர்ச்சி விகிதம் குறைந்தது. 11-வது

ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதல் நான்கு ஆண்டுகளில் வளர்ச்சி விகிதத்தின் அளவு 7.8 சதவீதமாக இருந்தது.

பொருளாதார வளர்ச்சி என்பது சேவைத் துறைகளில் மட்டுமே இருந்து வருகிறது. சேவைத் துறையின் வளர்ச்சி நீடித்த நிலைத்த பொருளாதாரத்துக்கு வகை செய்திடாது. எனவே, முதன்மை, உற்பத்தித் துறைகளில் அதிகளவு வளர்ச்சியை எட்ட வேண்டிய அவசியத் தேவையாகும்.

உள்கட்டமைப்பை மேம்படுத்தி சேவைத் துறையை வளர்ச்சிப் பெறச் செய்வதன் மூலம் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சியை 10 சதவீதத்துக்கும் அதிகமான அளவில் வரும் ஆண்டுகளில் எட்ட முடியும். பொருளாதார மேம்பாட்டை எட்டுவதன் மூலம், நகர்ப்புறம்-கிராமப்புறம் என்கிற வேறுபாட்டைக் குறைக்க முடியும்.

11-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தின் முதல் நான்கு ஆண்டுகளில் முதன்மைத் துறையில் வளர்ச்சி என்பது சாதகமான நிலையில் இல்லை. 0.51 சதவீதம் என்ற எதிர்மறை நிலையிலேயே இருந்தது. எனவே, முதன்மைத் துறைக்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டியது அவசியமாகும்.

கடந்த ஆண்டுகளில் தமிழகத்தில் உணவு தானிய உற்பத்தி என்பது 85.35 லட்சம் மெட்ரிக் டன்கள் என்ற அளவில் இருந்தது. இதை, நடப்பு நிதியாண்டில் 1.15 கோடி மெட்ரிக் டன்களாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

வேளாண் உற்பத்தியைப் பெருக்குவதன் மூலம், உற்பத்திக் குறைபாட்டைத் தடுக்கலாம். உற்பத்தியைப் பெருக்குவதுடன் விவசாயிகளின் வருவாயையும் அடுத்த ஐந்தாண்டுகளுக்குள் 200 முதல் 300 சதவீதம் அளவுக்கு உயர்த்த முடியும்.

பொருளாதாரத்தில் ஏற்பட்டு வரும் வீழ்ச்சி காரணமாக மக்களின் வருவாய் அளவானது பெருமளவு குறைந்து வருகிறது. குறிப்பாக, சமூகத்திலுள்ள சாதாரண மக்களிடம் அது அதிகளவு பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது. பொருளாதாரத்தில் நலிவடைந்த பிரிவினரின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்த பல்வேறு நலத் திட்டங்களை தமிழக அரசு செயல்படுத்தி வருகிறது.

பொதுமக்கள் தங்களது சொந்த வருவாயைக் கொண்டு அவர்கள் தங்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள வேண்டும் என்பதே இந்தத் திட்டங்களின் முக்கிய நோக்கம். சென்னை அருகே துணை நகரம், பள்ளி மாணவர்களுக்கு இலவச லேப்-டாப் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்கள் தமிழக அரசால் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

நாட்டின் முதன்மை மற்றும் சிறந்த மாநிலமாக தமிழகம் திகழ 12-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் உரிய ஆலோசனைகளுக்கான அறிக்கையை திட்டக் குழு தயார் செய்து அளிக்கும் என்று முதல்வர் ஜெயலலிதா பேசினார்.

## பருவநிலை மாறுபாட்டை ஆராயும் செயற்கைக்கோளுடன் விண்ணில் இன்று பாய்கிறது பி.எஸ்.எல்.வி.-சி18

First Published : 12 Oct 2011 12:39:25 AM IST



சென்னை, அக்.11: ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவன் விண்வெளி மையத்திலிருந்து 4 செயற்கைக்கோள்களுடன் பி.எஸ்.எல்.வி.-சி18 ராக்கெட் புதன்கிழமை விண்ணில் ஏவப்படுகிறது.

இந்த ராக்கெட்டை ஏவுவதற்கான இறுதிக்கட்டப் பணிகள் திட்டமிட்டப்படி நடைபெற்று வருவதாக இஸ்ரோ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த ராக்கெட்டை ஏவுவதற்கான இறுதிக்கட்டப் பணிகள் திட்டமிட்டப்படி நடைபெற்று வருவதாக இஸ்ரோ அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த ராக்கெட்டை ஏவுவதற்கான 50 மணி நேர கவுன்ட் டவுன் திங்கள்கிழமை காலை 9 மணிக்கு தொடங்கியது.

மேகம்-டிராபிக்யூஸ், வெஸ்ஸல்சாட்-1, எஸ்ஆர்எம்சாட், ஜுக்னு ஆகிய செயற்கைக் கோள்களை இந்த ராக்கெட் விண்ணில் செலுத்தும். இந்த 4 செயற்கைக்கோள்களின் மொத்த எடை 1047 கிலோ ஆகும்.

**ரூ.80 கோடியில் உருவான மேகம்-டிராபிக்யூஸ்:** வளிமண்டலம் மற்றும் பருவநிலை மாறுபாடு குறித்து ஆராய இந்திய மற்றும் பிரான்ஸ் நாடுகளின் கூட்டுத் தயாரிப்பான இந்தச் செயற்கைக்கோள் ரூ.80 கோடி மதிப்பில் உருவாக்கப்பட்டுள்ளது.

மொத்தம் 1,000 கிலோ எடை கொண்ட இந்தச் செயற்கைக்கோள் புவியிலிருந்து 867 கிலோமீட்டர் உயரத்தில் பூமியைச் சுற்றிவரும். பூமத்திய ரேகையையொட்டி 20 டிகிரி சாய்வான பாதையில் இது வலம் வரும்.

இந்தச் செயற்கைக்கோள் மூலம் பெறப்படும் தகவல்கள் ஆராய்ச்சிக்குப் பயன்படும். வளிமண்டலத்தில் வெப்பச் சலனம் ஏற்படுத்தும் தாக்கத்தை அறிவது இந்தச் செயற்கைக்கோளின் முக்கிய நோக்கம் ஆகும். வளிமண்டலத்தில் ஏற்படும் நீர் சுழற்சி குறித்து இந்தச் செயற்கைக்கோள் தகவல்களைப் பதிவு செய்யும்.

**பிற செயற்கைக்கோள்கள்:** சுற்றுச்சூழல் மாசு மற்றும் புவி வெப்பமடைதல் குறித்து அறிவதற்காக எஸ்.ஆர்.எம். பல்கலைக்கழக மாணவர்கள் உருவாக்கிய "எஸ்ஆர்எம்சாட்', கான்பூரில் உள்ள ஐ.ஐ.டி. மாணவர்களால் பூமியைப் படம் பிடிக்க உருவாக்கப்பட்டுள்ள "ஜுக்னு', கப்பல் போக்குவரத்துக்கு உதவுவதற்காக லுக்ஸம்பார்க்கில் வடிவமைக்கப்பட்ட "வெஸ்ஸல்சாட்-1' ஆகிய 3 செயற்கைக்கோள்களும் பி.எஸ்.எல்.வி.-சி18 ராக்கெட்டின் மூலம் விண்ணில் செலுத்தப்படுகின்றன.

**உளுந்தூர்பேட்டை விவசாயிகள் கவனத்துக்கு...**

First Published : 11 Oct 2011 02:25:52 PM IST

உளுந்தூர்பேட்டை, அக். 10: உள்ளாட்சித் தேர்தலை முன்னிட்டு, விழுப்புரம் மாவட்டம், உளுந்தூர்பேட்டை ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில், தலைவர் மற்றும் கவுன்சிலர் பதவிகளுக்கு வாக்கு எண்ணிக்கை நடைபெற உள்ளதால் அதற்கான கட்டமைப்புப் பணிகள் நடைபெற்று வருகிறது.

÷இதனால் இந்த விற்பனைக் கூடத்துக்கு வரும் விவசாயிகள் தங்கள் விளைப் பொருள்களை 23-ம் தேதி தேதி வரை கொண்டு வரவேண்டாம் என்றும், தேர்தல் முடிவுக்கு பின்னர் 24-ம் தேதி வழக்கம்போல் இயங்கும் என விற்பனைக் கூட அதிகாரிகள் தெரிவித்தனர்.

**விவசாயக் கடன் அட்டை அறிமுகம்**

First Published : 11 Oct 2011 02:33:58 PM IST

சிதம்பரம், அக். 10: இந்தியன் வங்கி விவசாயிகள் பயன்பெறும் வகையில் விவசாயக் கடன் அட்டை திட்டம் கிராமப்புற வங்கிகளில் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாக அவ்வங்கியின் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டி.எம்.பாசின் தெரிவித்தார்.

சிதம்பரம் அண்ணாமலை நகரில் அண்ணாமலைப் பல்கலைக்கழக நிர்வாக கட்டடத்தில் இயங்கி வந்த இந்தியன் வங்கி, பல்கலைக்கழக ராஜா முத்தையா மருத்துவக்கல்லூரிக்கு எதிரே புதிதாக கட்டப்பட்டுள்ள குமார ராஜா முத்தையா செட்டியார் கட்டட வளாகத்திற்கு மாற்றப்பட்டுள்ளது.

அண்ணாமலை நகர் இந்தியன்வங்கி கிளை புதிய கட்டட திறப்பு விழா திங்கள்கிழமை நடைபெற்றது. வங்கித் தலைவர் மற்றும் நிர்வாக இயக்குநர் டி.எம்.பாசின் தலைமை வகித்துப் பேசியதாவது:

இந்தியன் வங்கி விவசாயிகள் பயன்பெறும் வகையில் விவசாய கடன் அட்டை சேவையை தன்னுடைய கிராமப்புற வங்கிகளில் அறிமுகப்படுத்தியுள்ளது. இந்தப் புதிய சேவையின் மூலம் விவசாயிகள் தங்கள் கிராமத்தில் இருந்தவாறே விவசாய இடுபொருள்களை வாங்கிக் கொள்ளவும், அதற்கான கிரயத் தொகையை செலுத்தவும் இயலும்.

அனைவருக்கும் வங்கி சேவை திட்டத்தின் கீழ் கிராமப்புறங்களில் வாழும் அனைத்து தரப்பினரும் பயன்பெறும் வகையில் மாறுபட்ட தொடர் வைப்பு என்ற புதிய சேமிப்பு திட்டத்தை அறிமுகப்படுத்தியுள்ளது.

மேலும், அதிகளவில் கணக்குப் பரிவர்த்தனை செய்யும் வாடிக்கையாளர் நலன் கருதி மாஸ்டர் கார்டு எனும் பிளாட்டினம் டெபிட்கார்டு வசதியை சமீபத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது என்றார்.

பல்கலைக்கழகப் பதிவாளர் எம்.ரத்தினசபாபதி புதிய கிளையையும், ஏடிஎம் மையத்தையும் திறந்து வைத்தார்.

அண்ணாமலை நகர் கிளை முதன்மை மேலாளர் ஏ.வி.உன்னிகிருஷ்ணன் வரவேற்றார். இந்தியன் வங்கி கடலூர் மண்டல மேலாளர் இ.சுந்தரராஜன் நன்றி கூறினார்.

**சின்னச்சின்ன செய்திகள்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 12,2011,00:00 IST



**பட்டுப்புழுவிற்கு ஒருங்கிணைந்த பூச்சி மற்றும் நோய் நிர்வாகம்**

**பால் நோய் நிர்வாகம்:** த.வே.ப.க. செரிதூள் படுக்கைக்கிருமி நாசினி - 4 கிலோ/ 100 முட்டைத் தொகுதிக்கு; தாவர உட்கூறு தெளிப்பு (0.1 சதவீதம்) - 3ம் பருவ புழுவிற்கு.

**பிளாச்சரி நிர்வாகம்:** க்ளோரம் பெனிக்கல் 0.05 சதம்; மூன்றாம், நான்காம், ஐந்தாம் பருவ புழுக்களின் மீது தெளித்தல்.

**ஊசி ஈ நிர்வாகம்:** கதவு, சன்னல்களில் வலை அடைத்தல்; ஊசி சைடு 5லி/100 முட்டைத் தொகுதிக்கு - மூன்றாம், நான்காம், ஐந்தாம் பருவ புழுக்களின் மீது தெளித்தல்; நீசோலிங்ஸ் தைம்ஸ் ஒட்டுண்ணியை 1 லட்சம்/100 முட்டைத் தொகுதிகள் என்ற அளவில் நான்காம், ஐந்தாம் பருவ புழுக்கள், பட்டுக்கூடு அறுவடைக்குப்பின் தெளித்தல்; அசிபர் கவர்ச்சி பொறி (25

மிலி/லிட்டர் நீரில்) 3ம் பருவத்திலிருந்து வைத்து பூச்சிகளைக் கவர்ந்து அழித்தல். **நன்மைகள்:** சுத்திகரிக்கப்பட்ட பட்டுக்கூடு விளைச்சல்; கோயம்புத்தூர் மாவட்டம் 22 சதம், ஈரோடு மாவட்டம் - 49 சதம். மேலும் **விபரங்களுக்கு**: பேராசிரியர் மற்றும் தலைவர், பட்டுப்புழுவியல் துறை, பயிர் பாதுகாப்பு மையம், தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம். போன்: 0422-661 1296.

**குலைகளிலிருந்து பாக்கு பிரித்தெடுக்கும் இயந்திரம்:** பாக்கு சாகுபடியில் குறிப்பாக அறுவடை காலத்தில் ஆள் பற்றாக்குறை அதிகரித்து வருகிறது. பாக்கு மரத்திலிருந்து குலைகளை அறுவடை செய்தவுடன் குலைகளிலிருந்து காய்களைப் பிரித்தெடுப்பது ஒரு கடினமான வேலை. எனவே பணியாளர்களின் வேலைப்பளுவைக் குறைத்து உற்பத்தித் திறனை அதிகரிக்கும் வண்ணம் கோவை தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகத்தின் வேளாண்மைப் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் உள்ள பண்ணை இயந்திரவியல் துறையில் செய்யப்படும் பணி வேளாண் தொழில் சூழலாய்வு மற்றும் பாதுகாப்புடன் கூடிய "குலையிலிருந்து பாக்கு பிரித்தெடுக்கும் இயந்திரம்' ஒன்று உருவாக்கப்பட்டுள்ளது.
இந்த இயந்திரத்தில் மூன்று குதிரைத்திறன் கொண்ட பெட்ரோல், மண்ணெண்ணெய் மூலம் இயங்கும் இன்ஜின் அல்லது மின்சார மோட்டார், பாக்கு பிரித்தெடுப்பதற்கான உருளை, உட்செலுத்தி, சல்லடை போன்ற பாகங்கள் உள்ளன. எளிதாக இழுத்துச் செல்வதற்கு இரு சக்கரங்கள் பொருத்தப்பட்டுள்ளன. இந்த இயந்திரத்தின் விலை ரூ.20,000/- (இன்ஜின் அல்லது மின்மோட்டார் நீங்கலாக).
பச்சைப்பாக்கு, பழுப்பாக்குகளை குலையிலிருந்து பிரித்தெடுக்க ஏற்றது. ஒரு மணி நேரத்தில் சுமார் 650 முதல் 950 கிலோ வரை பாக்குகளைப் பிரிக்க இயலும். கருவி வாங்குவதற்கு அணுக **வேண்டிய முகவரி**: பேராசிரியர் மற்றும் தலைவர், வேளாண் இயந்திரங்கள் ஆராய்ச்சி மையம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம், த.வே.பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்-641 003; போன்: 0422-661 1204, 245 7576.

**முந்திரியில் அடர் நடவு முறை:** 5 x 4 மீட்டரில் முந்திரி ஒட்டுக்கன்றுகளை நடுதல்; ஒரு எக்டருக்கு 500 கன்றுகள் (பொதுவான நடவு முறையில் 7 x 7 மீட்டர் இடைவெளியில் 200 கன்றுகள் / எக்டர்) உரப்பரிந்துரை - 225:75:75 கிலோ தழை, மணி, சாம்பல் சத்து/எக்டர்; மரப்பராமரிப்பு தவறாமல் வருடந்தோறும் கவாத்து செய்தல் நன்மைகள்: அதிக விளைச்சல்; 3250 கிலோ முந்திரி/எக்டர், நிகரலாபம் -6ம் ஆண்டு முதல் வருடத்திற்கு ரூ.68,876.-டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.

**தென்னையில் ஒருங்கிணைந்த பூச்சி நிர்வாகம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 12,2011,00:00 IST



தென்னையின் மகசூல் குறைவிற்கு சத்துப்பற்றாக்குறை, பூச்சி மற்றும் நோய் தாக்குதல் முக்கிய பங்கு வகிக்கின்றன. தென்னையை காண்டாமிருக வண்டு, சிவப்பு கூன்வண்டு, கருந்தலைப்புழு மற்றும் ஈரியோபைட் சிலந்திகள் தாக்கி மகசூல் இழப்பு ஏற்படுகிறது.

**பூச்சி தாக்குதலின் அறிகுறிகள்**

* காண்டாமிருக வண்டின் தாக்குதல் இருந்தால் நன்றாக வளர்ந்த ஓலைகள், முக்கோண வடிவில் விசிறி போன்றும் ("வி' வடிவில்) நடுக்குருத்து ஒன்றாக சேர்ந்தும், நடுக்குருத்தின் அடியில் சக்கை ஒட்டிக்கொண்டும் இருக்கும்.
* அடிமரத்தில் பழுப்பு நிறத்தில் சாறு வடிதல், உள்இலைகள் மஞ்சள் நிறமாக மாறுதல் மற்றும் நுனிப்பகுதியில் உள்ள நடுக்குருத்து மெதுவாக வாட ஆரம்பித்தல் போன்றவை சிவப்பு கூன்வண்டின் தாக்குதலாகும்.
* இலைகள் பச்சையமின்றி நெருப்பில் கருகியது போன்றும், தாக்கப்பட்ட இலைகளின் அடியில் கழிவுகள் இருப்பதும் கருந்தலைப் புழுக்களின் அறிகுறிகள்.
* தேங்காய் நெற்று சொரசொரப்பாக இருப்பது ஈரியோபைட் சிலந்தியின் தாக்குதலாகும்.

**ஒருங்கிணைந்த பூச்சிக் கட்டுப்பாட்டுமுறைகள்**

* ஒரு மரத்திற்கு யூரியா 1.3 கிலோ, சூப்பர் பாஸ்பேட் 2 கிலோ, பொட்டாஷ், 3.5 கிலோ என்ற அளவில் வருடத்திற்கு ஒருமுறை உரமிட வேண்டும்.

* 50 கிலோ நன்கு மக்கிய தொழு உரத்துடன் 5 கிலோ வேப்பம் புண்ணாக்கு இடவேண்டும்.
* நுண்ணூட்ட உரமான போராக்சை 50 கிராம் என்ற அளவில் ஒரு மரத்திற்கு இடவேண்டும்.
* மடிந்த மரங்களைத் தோப்புகளிலிருந்து அகற்றி எரித்துவிட வேண்டும். ஏனெனில் அவைகள் வண்டின் இனப்பெருக்கத்திற்கு உகந்த இடமாகிவிடுகிறது.
* தொழு உரத்தை குழிகளிலிருந்து எடுக்கும்பொழுது அவற்றில் இருக்கும் புழுக்கள் மற்றும் கூட்டுப்புழுக்களைச் சேகரித்து அழித்துவிட வேண்டும்.
* பச்சை மஸ்கார்டைன் பூஞ்சாணத்தை (மெட்டாரைசியம் அனிசோபிலியே) எருக்குழிகளில் கலந்துவிட வேண்டும்.
* விளக்குப் பொறியை முதல் கோடைமழை சமயங்களில் மற்றும் பருவமழைக் காலங்களிலும் அமைத்துக் கவர்ந்து அழிக்கலாம்.
* ஒரு கிலோ ஆமணக்குப் புண்ணாக்கினை 5 லிட்டர் தண்ணீரில் மண் பானைகளில் ஊறவைத்து தோப்புகளில் ஆங்காங்கே வைத்து காண்டாமிருக வண்டுகளைக் கவர்ந்து அழிக்கலாம்.
* கரும்புச் சர்க்கரைப்பாகு 2.5 கிலோ (அ) கள் 2.5 லிட்டருடன் அசிடிக் அமிலம் 5 மில்லி, 5 கிராம் ஈஸ்ட் மாத்திரையை இவற்றுடன் நீளவாக்கில் சிறு துண்டுகளாக்கிய முப்பது தென்னை மட்டைகளை ஊறவைத்து தோப்புகளில் ஆங்காங்கே வைத்து கூன் வண்டுகளை கவர்ந்து அழிக்கலாம்.
* ரைனோலூர், பெரோலூர் இனக்கவர்ச்சிப் பொறிகளை இரண்டு எக்டருக்கு ஒன்று வீதம் வைத்து வண்டுகளைக் கவர்ந்து அழிக்கவும்.
* பச்சை தென்னை மட்டைகளை நீளவாக்கில் பிளந்து கள்ளில் நன்கு தேய்த்து தோப்புகளில் ஆங்காங்கே வைப்பதன் மூலம் வளர்ந்த வண்டுகளை கவர்ந்து அழிக்கலாம்.
* மரத்தில் சேதம் ஏற்படாமல் முடிந்தவரை பார்த்துக் கொள்ள வேண்டும். அவ்வாறு சேதம் ஏற்பட்டால் சிமெண்ட் கொண்டு அவற்றை அடைத்து வண்டுகள் முட்டையிடுவதை தவிர்க்கலாம்.
* பச்சை மட்டைகளை வெட்டுவதைத் தவிர்க்க வேண்டும்.
* ஒவ்வொரு முறையும் தேங்காய் எடுக்கும் தருணத்தில் தென்னை மடல் பகுதிகளை நன்கு சோதிக்க வேண்டும். அரைமீட்டர் நீளமுள்ள குத்தூசி கொண்டு மடல்களுக்கும், குருத்துகளுக்கும் இடையே செருகி வண்டு இருப்பதை சோதித்து இருந்தால் குத்தி எடுத்துவிட வேண்டும்.
* தென்னங்கன்றுகளில் அடிப்பாகத்தில் பண்ணாடைகளின் உள்பகுதியில் மூன்றரை கிராம் எடையுள்ள மூன்று (நாப்தலின்) பாச்சை உருண்டைகளை (அ) அந்துப்பூச்சி உருண்டைகளை ஒரு கன்றுக்கு 3 என்ற அளவில் 45 நாட்களுக்கு ஒரு முறை வைத்து கன்றுகளை காண்டாமிருக வண்டின் தாக்குதலிலிருந்து தவிர்க்கலாம்.
* கருந்தலைப்புழு தாக்கப்பட்ட இலைகளை வெட்டி எரித்துவிட வேண்டும்.
* கோடைகாலத்தில் கருந்தலைப்புழுக்களின் தாக்குதல் அதிகமாக காணப்பட்டால் ஒரு எக்டருக்கு 300 பெத்திலிட் ஒட்டுண்ணி குளவி மற்றும் 4500 பிரோகனிட் குளவியை மரத்தில் விடவேண்டும்.

* வேப்பங்கொட்டைத் தூள் அல்லது வேம்பு பருப்புத்தூள் 150 கிராமுடன் இரண்டு மடங்கு மணலைக் கலந்து அல்லது போரேட் 10 சதம் குருணை மருந்து 5 கிராமை ஒரு சிறிய துளையிடப்பட்ட பாலிதீன் பையில் எடுத்துக்கொண்டு அதை குருத்து மற்றும் மடல் பகுதிகளில் உள்ளிருந்து மூன்றாவது மட்டைகளின் அடிப்பகுதியில் பண்ணாடைகளுக்கு இடையில் வைப்பதன் மூலம் காண்டாமிருக மற்றும் கூன் வண்டுகளால் ஏற்படும் சேதத்தைத் தவிர்க்கலாம்.
* வேர் மூலம் பூச்சிக்கொல்லி மருந்து செலுத்தி கூன்வண்டு மற்றும் கருந்தலைப்புழு தாக்குதலை குறைக்கலாம். புதிய வேரை தேர்ந்தெடுத்து சிறிய கத்தியால் சாய்வாக வெட்டி பூச்சிக்கொல்லி மருந்து கரைசலான மோனோகுரோட்டோபாஸ் 10 மில்லியுடன் 10 மில்லி தண்ணீரை ஒரு பாலிதீன் பையில் இட்டு வேரை கரைசலின் உள்ளே விட்டு பாலிதீன் பையை நூல் கொண்டு கட்டவேண்டும். 24 மணி நேரத்திற்கு பிறகு கரைசல் உறிஞ்சப் பட்டிருக்கிறதா என்று பார்க்கவேண்டும். அப்படி இல்லையென்றால் வேறு ஒரு வேர்ப்பகுதியை தேர்ந்தெடுக்க வேண்டும். மருந்து செலுத்தியதிலிருந்து 45 நாட்கள் கழித்துதான் இளநீர் மற்றும் காய்களை பறிக்க வேண்டும்.
* வேர்மூலம் அசாடிராக்டின் 1 சதம் என்ற வேம்பு பூச்சிக்கொல்லியை 10 மி.லி. அளவில் 0 மி.லி. தண்ணீருடன் கலந்து செலுத்தி ஈரியோபைட் சிலந்தி தாக்குதலை குறைக்கலாம்.
சி.விஜயராகவன், மானாவாரி வேளாண்மை ஆராய்ச்சி நிலையம், செட்டிநாடு-630 102.
ஜட்டா கவிதா, வ.கணேசராஜா,வேளாண்மை அறிவியல் நிலையம், ராமநாதபுரம்-623 503.

**குறுமிளகு விலையில் வந்த ஏற்றத்தால் லாபம்**

பதிவு செய்த நாள் : அக்டோபர் 12,2011,03:00 IST

கூடலூர் : குறுமிளகுக்கு தற்போது நல்ல விலை கிடைத்து வருவதால், கூடலூர் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.நீலகிரி மாவட்டம் கூடலூரில் தேயிலை, காபி தோட்டங்களில் ஊடுபயிராக குறுமிளகு பயிரிடப்பட்டுள்ளது.கடந்த சில ஆண்டுகளுக்கு முன் அதிக விளைச்சல் காரணமாக குறுமிளகு விலை வெகுவாக குறைந்தது. மூன்று ஆண்டுகளுக்கு முன் ஒரு கிலோ காய்ந்த குறுமிளகு 68 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டது. விலை குறைவினால் விவசாயிகள் குறுமிளகு உற்பத்தியில் ஆர்வம் குறைந்து காணப்பட்டனர். போதிய பராமரிப்பு இல்லாததும், நோய் தாக்கியதாலும் குறுமிளகு உற்பத்தி வெகுவாக குறைய துவங்கியது; அதன் தேவையும் அதிகரித்தது.கடந்த இரண்டு ஆண்டுகளாக இதன் விலை நாளுக்கு நாள் உயர துவங்கியது. கடந்த 6 மாதத்துக்கு முன் ஒரு கிலோ குறுமிளகு 230 ரூபாய் வரை விலை கிடைத்தது. தொடர் விலை உயர்வினால் தற்போது காய்ந்த குறுமிளகு கிலோ 330 ரூபாய்க்கு மேல் விலை கிடைக்க துவங்கியுள்ளது. இந்த விலை உயர்வு விவசாயிகளிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளதால்,

குறுமிளகு விவசாயத்தில் அதிக கவனம் செலுத்த துவங்கியுள்ளனர்.குறுமிளகு வியாபாரிகள் கூறுகையில்,""குறுமிளகுக்கு உலக மார்க்கெட் பொருத்தே விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. தற்@பாது விலை அதிகரித்துள்ளது.தேவை அதிகம் என்பதால், மேலும் விலை அதிகரிக்கும்," என்றார்.

தினத் தந்தி

## *நடப்பு நிதி ஆண்டில் உணவு தானிய உற்பத்தியை 115 லட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரிக்க இலக்கு மாநில திட்டக்குழு கூட்டத்தில் ஜெயலலிதா பேச்சு*



தமிழ்நாடு மாநில திட்டக்குழுவின் முதல் கூட்டம் முதல்–அமைச்சர் ஜெயலலிதா தலைமையில் சென்னை கோட்டையில் நேற்று நடந்தபோது எடுத்த படம். இதில் திட்டக்குழுவின் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

*சென்னை, அக்.12–*

*நடப்பு நிதி ஆண்டில் உணவு தானிய உற்பத்தியை 115 லட்சம் டன்னாக அதிகரிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது என்று மாநில திட்டக்குழு கூட்டத்தில் முதல்–அமைச்சர் ஜெயலலிதா கூறினார்.*

முதல் கூட்டம்

தமிழ்நாட்டில் அ.தி.மு.க. தலைமையிலான புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு மாநில திட்டக்குழு மாற்றி அமைக்கப்பட்டது. திட்டக்குழுவின் தலைவர் முதல்–அமைச்சர் ஆவார். துணைத்தலைவராக ஓய்வுபெற்ற ஐ.ஏ.எஸ். அதிகாரி சாந்தா ஷீலா நாயர் நியமிக்கப்பட்டார். உறுப்பினர்களாக கிறிஸ்டோபர் நெல்சன், டாக்டர் வி.சாந்தா, டாக்டர் கே.ஸ்ரீதர், டாக்டர் கே.ராமசாமி, தொழிலதிபர் ஏ.சி.முத்தையா, முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் இ.பாலகுருசாமி ஆகியோர் உறுப்பினர்களாக பொறுப்பேற்றனர். உறுப்பினர் செயலாளராக ஐ.ஏ.எஸ். அதிகாரி கி.தனவேல் பணிபுரிகிறார்.

இந்த நிலையில், மாநில திட்டக்குழுவின் முதலாவது ஆலோசனை கூட்டம் முதல்–அமைச்சரும், திட்டக்குழுவின் தலைவருமான ஜெயலலிதா தலைமையில் சென்னை கோட்டையில் நேற்று நடந்தது. துணைத்தலைவர் சாந்தா ஷீலா நாயர் முன்னிலை வகித்தார். இந்த கூட்டத்தில் முதல்–அமைச்சர் ஜெயலலிதா பேசும்போது கூறியதாவது:–

பொருளாதார வளர்ச்சி

அனைத்து தரப்பு மக்களையும் உள்ளடக்கிய பொருளாதார வளர்ச்சியை எட்டுவதற்கு எனது தலைமையிலான அரசு உறுதிபூண்டுள்ளது. 11–வது ஐந்தாண்டு திட்ட காலத்தில் (2007–2012) பொருளாதார வளர்ச்சி இலக்கு 9 சதவீதமாக நிர்ணயிக்கப்பட்டது. ஆனால், விவசாயத்துறையும், உற்பத்தி துறையும் எதிர்பார்த்த வளர்ச்சியை அடையவில்லை. இந்த இரண்டு துறைகளிலும் வளர்ச்சி வீதம் தேசிய சராசரியைக் காட்டிலும் குறைவாகவே இருந்தது.

இதன் விளைவாக 11–வது ஐந்தாண்டு திட்ட காலத்தின் முதல் 4 ஆண்டு காலத்தில் 7.8 சதவீத வளர்ச்சிதான் அடைய முடிந்தது. மாநிலத்தில் பொருளாதார வளர்ச்சியில் தற்போது அதிக பங்கு வகிப்பது சேவைத்துறை தான். ஆனால், சேவை துறையில் வளர்ச்சி எப்போதும் சீராக இருக்கும் என்று சொல்ல முடியாது. எனவே, விவசாயத்துறையும், உற்பத்தி துறையும் மட்டுமே நீடித்த வளர்ச்சிக்கு உதவும்.

உணவு தானிய உற்பத்தி அதிகரிப்பு

உள்கட்டமைப்பு மேம்பாட்டுத்துறையில் நிலவும் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண வேண்டும். தற்போதைய நிலையில், சேவைத்துறையில் வளர்ச்சியை தக்கவைத்தால் மட்டுமே வரும் காலங்களில் ஒட்டுமொத்த வளர்ச்சி 10 சதவீதத்தை தாண்டும். பொருளாதார வளர்ச்சி, நகரம்–கிராமம் என்ற பாகுபாடு ஏற்படுத்தாமல் அனைத்து தரப்பு மக்களையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டியது அவசியம்.

11–வது ஐந்தாண்டு திட்ட காலத்தின் முதல் 4 ஆண்டுகளில் விவசாயத்துறையில் எதிர்பார்த்த வளர்ச்சி இல்லை. இன்னும் சொல்லப்போனால் ஏற்கனவே இருந்த வளர்ச்சி அரை சதவீதம் குறைந்துவிட்டது. நடப்பு நிதி ஆண்டில் உணவு உற்பத்தியை முந்தைய ஆண்டு இருந்த 85.35 லட்சம் மெட்ரிக் டன்னில் இருந்து 115 லட்சம் மெட்ரிக் டன்னாக அதிகரிக்க அரசு இலக்கு நிர்ணயித்து உள்ளது.

விவசாயத்திற்கு அதிக முக்கியத்துவம்

வேளாண்துறையைப் பொறுத்தமட்டில், உற்பத்தி திறனை அதிகரிப்பதன் மூலமாகவும், மதிப்பு கூட்டப்பட்ட பொருட்களை உருவாக்குவதன் மூலமாகவும் மட்டுமே மேம்படுத்த முடியும். அடுத்த 5 ஆண்டுகளில் விவசாயிகளின் வருமானத்தை 200 முதல் 300 சதவீதம் உயர்த்த இலக்கு நிர்ணயித்து உள்ளோம். விவசாயத்தில் நவீன தொழில்நுட்பங்களை பின்பற்றுவதன் வாயிலாகவும், உற்பத்தி திறனை அதிகரிப்பதன் மூலமாகவும், கலப்பு விவசாய முறையை கடைப்பிடிப்பதன் மூலமாகவும், ஒருங்கிணைந்த பண்ணை மேம்பாட்டு திட்டத்தை செயல்படுத்துவதன் வாயிலாகவும் இந்த இலக்கை அடைய முடியும் என்று அரசு கருதுகிறது.

பொருளார மந்த நிலை காரணமாக மக்களுக்கு வருமான இழப்பு ஏற்பட்டதை கருத்தில் கொண்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவும் வகையில் எனது அரசு பல்வேறு சமூக பாதுகாப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. ஏழை, எளியவர்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவதற்காக ஏராளமான பொருளாதார, சமூகநல மேம்பாட்டு திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

கிராமங்கள் மேம்பாடு

இதன்மூலம் காலப்போக்கில் ஏழைகள் சுய வருமானத்தின் மூலம் தங்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்திக்கொள்வார்கள். அந்த வகையில், தமிழ்நாடு கிராம வாழ்வாதார மேம்பாட்டு திட்டம், நகர்ப்புற மக்களுக்கு இணையாக கிராமப்புற மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்த பெரிதும் துணைபுரியும்.

சென்னையில் மோனோ ரெயில் திட்டம், சென்னையை அடுத்த திருமழிசையில் அனைத்து நவீன வசதிகளுடன் கூடிய சாட்டிலைட் நகரம், கிராமப்புறங்களில் பசுமை வீடுகள் திட்டம், பள்ளி, கல்லூரி மாணவ–மாணவிகளுக்கு லேப்–டாப் கம்ப்யூட்டர், பல்கலைக்கழகங்களில் சிறப்பு மையங்கள், தட்டுப்பாடு இல்லாமல் மின்சாரம், தேவையான உள்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுத்துவது ஆகிய புதிய திட்டங்களும் செயல்படுத்தப்பட உள்ளன. இந்தியாவில் தமிழ்நாட்டை முதன்மை மாநிலமாக மாற்ற வேண்டும் என்ற குறிக்கோளுடன் செயல்படுவோம்.இவ்வாறு முதல்–அமைச்சர் ஜெயலலிதா கூறினார்.

*நபார்டு வங்கி வழங்கிய கடன் ரூ.1 லட்சம் கோடியை தாண்டியது*



*இக்கனாமிக் டைம்ஸ் செய்தி பிரிவு*

*அகமதாபாத்*

*விவசாயம் மற்றும் கிராமப்புற அடிப்படை கட்டமைப்பு வளர்ச்சிக்கு கடன் உதவி வழங்கி வரும், பொதுத் துறைநபார்டு வங்கி, செப்டம்பர் மாதம் வரையிலுமாக, இத்துறைகளுக்கு வழங்கியுள்ள மொத்த கடன் ரூ.1 லட்சம் கோடியை தாண்டியுள்ளது.*

*சாலைகள் – பாலங்கள்*

*நபார்டு வங்கியிடமிருந்து 28 மாநிலங்கள், யூனியன் பிரதேசமான புதுச்சேரி, தேசிய கிராமப்புற சாலை மேம்பாட்டு முகமை போன்றவை பெற்றுள்ள நிதி ரூ.1,02,844 கோடியாகும்.*

*இந்த வகையில், விவசாயம் (40), சாலை (33%), பாலங்கள் (12%), குடிநீர் (9%), சமூக நலன் (6%) ஆகிய துறைகள் பயன் அடைந்துள்ளன.*

*தற்போது இவ்வங்கியின் நிதி உதவியுடன் தயாராகி வரும் திட்டங்கள் நிறைவு பெற்றால், 164 லட்சம் ஹெக்டேர் நிலத்தில் விவசாயம், 3.30 லட்சம் கிலோ மீட்டர் தூர சாலை வசதி, 6.67 லட்சம் மீட்டர் நீள பாலங்கள் போன்றவை மேம்படுத்தப்படும் என கூறப்படுகிறது.*

*மத்தியபிரதேசத்தில், பன்சாகர் நீர்பாசன திட்டம், குஜராத்தில் நர்மதா பிரதான கால்வாய் திட்டம், நர்மதா பள்ளத்தாக்கில் நீர்ப்பாசன திட்டம், உத்தரபிரதேசத்தில் கால்வாய் நீர்ப்பாசன திட்டம், பீகார், ராஜஸ்தான், குஜராத் மற்றும் தமிழ்நாட்டில் கிராமப்புற குடிநீர் வழங்கல் திட்டங்கள், பஞ்சாப், பீகார், ஒரிசா போன்ற மாநிலங்களில் அமைக்கப்பட்டு வரும் மேம்பாலங்கள் போன்றவை நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் தற்போது நிறைவேறி வரும் திட்டங்களாகும்.*

*மகாராஷ்டிராவில் கடலோர பகுதிகளில் மீன்பிடி துறைமுகம் ஒன்று அமைந்து வருகிறது. புதுமையான இத்திட்டத்தின்படி, கடலுக்குள் நீண்ட தூரம் செல்லாமல், கடலோர பகுதிகளிலேயே மீன் பிடி வசதி உருவாக்கப்படுகிறது. இதற்கான கட்டமைப்பு வசதி நபார்டு வங்கியின் நிதி உதவியின் மூலம் வடிவம் பெற்று வருகிறது.*

**உருளைக்கிழங்கு**

*அதேபோல், 4,000 டன் உருளைக்கிழங்குகளை பாதுகாக்க குளிர் பதன கிடங்கு ஒன்றை அமைக்க மேற்கு வங்க அரசு நபார்டு வங்கியின் நிதி உதவியை பெற்றுள்ளது.*

*விவசாயம் மற்றும் கிராமப்புற மேம்பாடு தவிர, புதிதாக தானிய கிடங்குகளை அமைப்பதற்கும் இவ்வங்கி நிதி உதவி அளிக்கிறது. இதற்கென, நடப்பு நிதி ஆண்டில் ரூ.2,000 கோடியை ஒதுக்கீடு செய்துள்ளது.*